| R7160 |
|---|

| Sub. Code |
|---|
| 411301 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER – 2022**

**Third Semester**

**தமிழ்**

**காப்பிய இலக்கியங்கள்**

**(CBCS – 2019 onwards)**

Time : 3 Hours　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　$(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. கோவலனுக்கு வந்த மடல் தந்த செய்தி என்ன?

2. மணிமேகலை பெயர்ப் பொருத்தத்தை எழுதுக.

3. குறிப்பு வரைக : கவுந்தியடிகள்.

4. மணநூலின் சிறப்புக்களின் இரண்டனை எழுதுக.

5. நீலகேசி எந்நூலுக்கு மறுப்பாக எழுதப்பட்டது?

6. வீரமாமுனிவரின் படைப்புகளில் இரண்டனைக் குறிப்பிடுக.

7. ____________ எனும் பெயரிய கூற்றின் ஆற்றலான்.

8. நுழவத்து – பொருள் தருக.

9. மாதவ மேகலைக் காப்பியத்தின் மையப்பொருண்மை யாது?

10. கவிஞர் வாலியின் இலக்கியப் படைப்புகள் இரண்டனை எழுதுக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) அடைக்கலக்கதை உணர்த்தும் செய்திகள் யாவை?

(அல்லது)

(ஆ) மணிபல்லவத்தில் நிகழ்ந்தவை யாவை?

12. (அ) சீவகசிந்தாமணி – பெயர்ப்பொருத்தத்தை ஆராய்க.

(அல்லது)

(ஆ) நீலகேசி – குறிப்பு வரைக.

13. (அ) கம்ப இராமாயணத்தின் அமைப்பை விளக்குக.

(அல்லது)

(ஆ) குகனின் சிறப்புக்களை எழுதுக.

14. (அ) தேம்பாவணியின் தனித்தன்மைகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) சீறாப்புராணம் நூலமைப்பைக் குறிப்பிடுக.

15. (அ) பசித்தார்க்கு உதவ பாவை சொல் காதை உணர்த்தும் கருத்துக்கள் யாவை?

(அல்லது)

(ஆ) பாண்டவர்பூமியின் கருப்பொருளை விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. புறஞ்சேரியிறுத்த காதை உணர்த்தும் செய்திகளை விவரிக்க.

17. பூமகள் இலம்பகக் கருத்துக்களை விளக்குக.

18. கம்பரின் எழுத்தாளுமையை குகப்படலம் வழி விளக்குக.

19. பாலமாட்சிப் படலம் – கட்டுரை வரைக.

20. வரலாறு உரைத்த காதை குறித்து விரிவாக எழுதுக.

---

| R7161 |
|---|

| Sub. Code |
|---|
| 411302 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER – 2022**

**Third Semester**

தமிழ்

சிற்றிலக்கியங்கள்

**(CBCS – 2019 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.

1. நந்திவர்மனின் முழுப்பெயரை எழுதுக.

2. நந்திக்கலம்பகத்தில் குறிப்பிடப்பெறும் போரில் வாகைசூடிய இடம் எது?

3. ஆண்பாற் பிள்ளைப் பருவத்திற்கு மட்டும் உரித்தான மூன்று பருவங்கள் யாவை?

4. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் பாடப்பெற்ற கடவுள் யார்?

5. பள்ளு இலக்கியம் புலப்படுத்தும் கருப்பொருள் யாது?

6. முக்கூடற்பள்ளு கூறும் கலப்பை வகைகளில் இரண்டனைக் குறிப்பிடுக.

7. தமிழ்விடு தூதில் உள்ள கண்ணிகள் எத்தனை?

8. தூது இலக்கியத்தின் பாவகை எது?

9. கலிங்கத்துப் பரணியின் ஆசிரியர் யார்?

10. சிற்றிலக்கியச் செல்வம் என்ற நூலின் ஆசிரியர் யார்?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

அனைத்து வினாக்களுக்கு **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) மூன்றாம் நந்திவர்மன் பற்றிக் குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) நந்திக்கலம்பகத்தில் கணிகையின் செயல்களைக் குறிப்பிடுக.

12. (அ) குமரகுருபரரின் தமிழ்ச் சிறப்பை முத்துக்குமாரசாமி வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) பெண்பாற் பிள்ளைத் தமிழின் தனித்துவமான மூன்று பருவச் செய்திகளை எழுதுக.

13. (அ) மூத்தபள்ளி, இளையபள்ளி உரையாடல் செய்திகளைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) நெல்லின் சிறப்புக்களை பள்ளு இலக்கியத்தின் வழி விளக்குக.

14. (அ) தூதுப் பொருள்களாகக் கருதத்தக்கன யாவை?

(அல்லது)

(ஆ) தலைவி தமிழைத் தூதுவிடக் காரணங்கள் யாவை?

15. (அ) முதலாம் குலோத்துங்க சோழன் பற்றிக் குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) கலிங்கத்துப்பரணி உருவான சூழலை எடுத்துரைக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. நந்திக்கலம்பக இலக்கிய அமைப்பை விவரிக்க.

17. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் பெயர்ப் பொருத்தத்தை ஆராய்க.

18. உழவுத் தொழிலைப் போற்றும் ஒப்பற்ற இலக்கியம் முக்கூடற்பள்ளு என்பதை நிறுவுக.

19. தமிழ்விடுதூது முன்வைக்கும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

20. பரணி இலக்கியங்களில் முதன்மை பெற்றது கலிங்கத்துப் பரணி என்னும் கூற்றை மெய்ப்பிக்க.

**R7162**

| Sub. Code |
| --- |
| 411303 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER – 2022.**

**Third Semester**

**தமிழ்**

**இலக்கணம் – தொல்காப்பியம் - பொருளதிகாரம்**

**(முன்னைந்து இயல்கள்)**

**(CBCS – 2019 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. முந்நீர் வழக்கம் குறித்துத் தொல்காப்பியம் கூறுவதை எழுதுக.

2. தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் எத்திணைக்குரியது?

3. குறிப்பு வரைக : மருதத்திணை.

4. ஆஞ்சிக்காஞ்சி நிலை என்றால் என்ன?

5. தோழியின் பணிகள் யாவை?

6. குறியின் வகைகளை எழுதுக.

7. நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும் யாருக்குரிய செயல்?

8. தலைவனுக்குரிய இலக்கணம் யாது?

9. பால்கெழு கிளவிக்கு உரியோர் யாவர்?

10. அறத்தொடு நிற்றல் என்றால் என்ன?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பொழுதுகள் - விளக்குக.

(அல்லது)

(ஆ) கருப்பொருளை விளக்குக.

12. (அ) கரந்தைத்திணை - விளக்குக.

(அல்லது)

(ஆ) வாகைத்திணை - குறிப்பு வரைக.

13. (அ) களவெனப் படுவது யாது?

(அல்லது)

(ஆ) களவில் செவிலியின் நிலைப்பாடுயாது?

14. (அ) கற்பியல் உணர்த்தும் காமக்கிழத்தியர் கூற்று நிகழுமிடங்களைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) கற்பியல் கூறும் கரணம் பற்றி விளக்குக.

15. (அ) உள்ளுறை பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) காட்டலாகாப் பொருள் பற்றிப் பொருளியல் கூறுவன யாவை?

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றுக்குக்** கட்டுரைவடிவில் விடையளிக்க.

16. அகத்திணையியல் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

17. தமிழரின் அறம் பேணும் நிலையைப் புறத்திணையியல் வழி விவரிக்க.

18. களவியலில் தலைவி, தோழியின் இயல்புகளைப் புலப்படுத்துக.

19. கற்பியலில் தொல்காப்பியர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து வரைக.

20. பொருளியல் வழித் தொல்காப்பியர் கூறுவனவற்றை விளக்குக.

| R7163 |
|---|

| Sub. Code |
|---|
| 411304 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER – 2022**

**Third Semester**

தமிழ்

**இலக்கியத் திறனாய்வியல்**

**(CBCS – 2019 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு தொடரில் விடையளிக்க.

1. திறனாய்வு என்றால் என்ன?

2. உரையாசிரியர்கள் மேற்கொண்ட திறனாய்வுமுறை யாது?

3. 'அடிக்கருத்தியல்' - பொருள் தருக.

4. தமிழில் செவ்வியல் இலக்கியங்கள் எவை?

5. வரலாற்றியல் திறனாய்வின் சிறப்பைச் சுட்டுக.

6. உளவியலின் தந்தை என்று சுட்டப்படுவர் யார்?

7. பெண்ணியத் திறனாய்விற்குப் பங்களித்த இருவரைச் சுட்டுக.

8. 'தலித்தியம்' என்பதன் பொருள் யாது?

9. அமைப்பியல் திறனாய்வு என்றால் என்ன?

10. நவீனத்துவம், 'பின் நவீனத்துவம்' என்பதன் பொருளை விளக்குக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் <u>ஒருபக்க</u> அளவில் விடை தருக.

11\. (அ) திறனாய்வின் நோக்கத்தையும், பயனையும் விளக்குக.

(அல்லது)

(ஆ) மரபுவழித் திறனாய்வின் சிறப்பினை ஆராய்க.

12\. (அ) இலக்கியங்களில் ‘புனைவியல்’ குறித்து ஆராய்க.

(அல்லது)

(ஆ) உருவவியல் சிந்தனைகளின் தாக்கத்தை விவரிக்க.

13\. (அ) சமூகவியல் திறனாய்வின் சிறப்பினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) மதிப்பீட்டு முறைத் திறனாய்வின் வளர்ச்சி நிலைகள் குறித்து விவரி.

14\. (அ) பெண்ணியத் திறனாய்வின் நோக்கு நிலைகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) மார்க்சியத் திறனாய்வின் முன்னோடிகள் குறித்து விளக்குக.

15\. (அ) இலக்கண உரையாசிரியர்கள் மேற்கொண்ட திறனாய்வு முறைகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) இலக்கியங்களில் நவீனத்துவத் திறனாய்வின் செல்வாக்கினை ஆராய்க.

பகுதி இ (3 × 10 = 30)

ஏதேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. திறனாய்வின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து ஆராய்க.

17. சங்க இலக்கியங்களில் செவ்வியல் பண்புகள் இடம்பெற்றுள்ள தன்மையை ஆராய்க.

18. இலக்கிய நிலைபேற்றுத் தன்மைக்கு திறனாய்வு முறைகள் பயன்படுமாற்றை விவரிக்க.

19. தலித்தியத் திறனாய்வின் வளர்ச்சிப் போக்குகளை விளக்குக.

20. அரசியல் பொருள்முதவாதத் திறனாய்வுப் போக்குகளை விவரி.

| |
|---|
| **R7164** |

| |
|---|
| **Sub. Code** |
| **411305** |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER – 2022

### Third Semester

### Tamil

### ஊடகவியல்

### (CBCS – 2019 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு தொடரில் விடையளிக்க.

1. அச்சுக்கலையின் தந்தை யார்?

2. கேலிச்சித்திரங்களின் சிறப்பு யாது?

3. பாரதியார் தம் கட்டுரைகளை வெளியிட்ட இதழ் யாது?

4. செய்தித்தாள்கள், இதழ்கள் வேறுபாடு சுட்டுக.

5. வானொலியின் முக்கியத்துவம் பற்றிச் சுட்டுக.

6. இணையத்தின் பயன்பாட்டைச் சுட்டுக.

7. குறுஞ்செயலிகளின் நன்மைகளை எழுதுக.

8. முகநூலின் நன்மை, தீமைகளை குறிப்பிடுக.

9. தலையங்கங்களின் நோக்கத்தைச் சுட்டுக.

10. செய்தி அறிக்கை எழுதுபவர்க்குத் தேவையான தகுதிகள் யாவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் <u>ஒருபக்க</u> அளவில் விடை தருக.

11. (அ) ஊடகங்களும் வாய்மொழி இலக்கியங்களும் பற்றி ஆராய்க.

(அல்லது)

(ஆ) நடிப்புக் கலைஞர்களுக்கு உடல்மொழியின் இன்றியமையாத தன்மையை விவரி.

12. (அ) தமிழில் வேளாண்மை, தொழில் இதழ்களின் சிறப்பை விவரிக்க.

(அல்லது)

(ஆ) அச்சுக்கலையின் நவீன மாற்றங்களை ஆராய்க.

13. (அ) ஆவணப்படமும் சமூக விழிப்புணர்வும் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) காட்சி ஊடகங்களின் பயன்பாட்டை ஆராய்க.

14. (அ) முகநூல் (Facebook), கட்செவி (whatsapp) நன்மை தீமைகளை விவரி.

(அல்லது)

(ஆ) அஞ்சல் வகைகளின் சிறப்பினையும், மாற்றத்தையும் ஆராய்க.

15. (அ) ஊடகங்களும், வேலைவாய்ப்பும் குறித்து விவரி.

(அல்லது)

(ஆ) உற்பத்திப் பொருட்களை மக்களிடம் கொண்டு சேர்க்க விளம்பரங்கள் பயன்தரும் விதத்தை ஆராய்க.

பகுதி இ (3 × 10 = 30)

ஏதேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. நாட்டுப்புற ஊடகங்களின் சிறப்பினை ஆராய்க.

17. சமூகவளர்ச்சிக்கு இதழ்களின் பங்கு குறித்து விவரிக்க.

18. ஊடகச் செய்தி நிறுவனங்களின் செயல்பாட்டையும், பயனையும் விளக்குக.

19. சமூகவலைத்தளங்களின் தோற்றம் வளர்ச்சி குறித்து விவரி.

20. ஊடகங்களின் எதிர்காலநிலைகள் குறித்து விளக்குக.

———————